செய்தி வெளியீடு எண்: 051 நாள் : 22.01.2014

<u>செய்தி வெளியீடு</u>

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல் மேம்படுத்தப்பட்ட நவீன அரிசி ஆலைகள் மூலம் விரைவாக மற்றும் தரமான அரிசியாக மாற்றப்பட்டால் தான் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களுக்குத் தரமான அரிசி வழங்க இயலும்.

அந்த வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் இயக்கப்பட்டு வரும் அரிசி ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்த வேண்டியது அவசியமாகும். எனவே, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அம்மன்பேட்டை, பட்டுக்கோட்டை, மதுரை மாவட்டத்திலுள்ள கடச்சயேந்தல், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள எருக்கூர், கடலூர் மாவட்டத்திலுள்ள நெய்வேலி, கோவை மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செய்யார் ஆகிய 7 இடங்களிலுள்ள அரிசி ஆலைகளை 32 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் நவீனமயமாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கை பொது விநியோகத் திட்டத்தின் மூலம் தரமான அரிசியை பொது மக்களுக்கு வழங்க வழிவகுக்கும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- **22.1.2014.**